


காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், சாலவாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு அரசின் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி அந்த கிராமத்தில் உள்ள நியாயவிலைக் கடையில் நேற்று மாலை நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் குமார் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் சத்யா சக்திவேல் அனைவரையும் வரவேற்றார். இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்எல்ஏ பொங்கல் பரிசு தொகுப்பினை கிராம மக்களுக்கு வழங்கினார். இதனைத் தொடர்ந்து அப்பகுதி கிராமத்தைச் சேர்ந்த 1400 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிகழ்ச்சியில் அறங்காவலர் குழு உறுப்பினர் வெங்கடேசன், துணை தலைவர் நந்தா, நிர்வாகிகள் : பாபுஷெரிப்,அழகப்பன், சண்முகம்,வெங்கடேசன்,சந்தானம்,தங்கராஜ், ஜெய்சங்கர்,விஷ்ணு, தொடக்க தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க அதிகாரிகள் கௌதம் ராஜ், சகாதேவன், கண்ணபிரான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் உடன் இருந்தனர்.




சமத்துவம் போற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு நம் திராவிட மாடல் அரசு சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ள பொங்கல் பரிசுத்தொகுப்பினை, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி, 110–வது வார்டில் அமைந்துள்ள TUCS நியாய விலைக் கடையில் சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு பொதுமக்களுக்கு வழங்கி, அவர்களுக்கு பொங்கல் பண்டிகை வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்நிகழ்வில் வட்ட செயலாளர்கள் த.குணசேகர், கே.எஸ்.தினேஷ் பிரபு மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றார்கள்.

### உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு

# அருந்ததியர் சமூகத்திற்கு உள்ஒதுக்கீடு செல்லும்!

## முதல்வருக்கு நன்றி! இரா.அதியமான் அறிக்கை!

சென்னை, ஜன. 10-

சென்னையில் தமிழ்நாடு அருந்ததியர் கூட்டமைப்பின் தலைவர் அதியமான் தலைமையில் அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு பாதுகாப்பு பேரணியின் நிறைவில் நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

அடுக்கப்பட்ட மூட்டைகளில் அடி மூட்டையாக வாழ்ந்த வந்த அருந்ததியர் சமூகத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2009 வழங்கியள் ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்ற வரலாற்று சிறப்பு மிக்க தீர்ப்பை பெற்றுத்தர உறுதுணையாக இருந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஒட்டுமொத்த அருந்ததியர் சார்பாக தெஞ்சார்ந்த நன்றியினை தமிழ்நாடு அருந்ததியர் கூட்டமைப்பு தெரிவித்துக் கொள்கிறது.

பட்டியல் சமூகங்களில் ஒன்றுக்கொன்று படிநிலைச் சமூகங்களாகத்தான் இருந்து வருகின்ற சூழலில் பட்டியலில் உள்ள 16 சாதிகள் கல்வி வேலைவாய்ப்புகளில் அவரவர் மக்கம் தொகைக்கு உரிய சமூகத்தி கிடைக்கப்படவில்லை. சமூகநீதியை உறுதி செய்கின்ற வகையில் மொத்தமுள்ள பட்டியல் சாதிகளில் முன்னேறியவர்கள், பின் தங்கியவர்கள் என்பதை கண்டறிந்து அவரவர் மக்கள் தொகைக்கு ஏற்ப அதேசமயம் பின்தங்கிய நிலையையும் கருத்தில் கொண்டு இட ஒதுக்கீடை உச்சத்தி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் வகைப்படுத்தி வழங்க வேண்டும் என்று இப்பேரணி தமிழக அரசை வலியுறுத்துகிறது.

இந்திய சமூக அமைப்பு படிநிலை ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கியதாகும் காலம் காலமாக ஒரு சில குறிப்பிட்ட சமூகங்களே இட ஒதுக்கீட்டின் உரிமைகளை அனுபவித்துக் கொண்டு கல்வி பொருளாதாரம், அரசியல், அதிகாரம் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் முன்னேறி வருகின்றனர். பெரும்பான்மையாக வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு இட ஒதுக்கீட்டு உரிமைகள் சென்று சேரவில்லை. சமூகநீதி நிலைக்கு வேண்டும் என்றால் சாதிவாரி கணக்கெடுப்பு நடைபெற வேண்டும். எனவே மத்தியில் ஆட்சி செய்கின்ற பாரதிய ஜனதா கட்சி அரசு காலம் தாழ்த்தாமல் உடனடியாக சாதி வாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு அருந்ததியர் கூட்டமைப்பு ஒன்றிய கேட்டுக்கொள்கிறது.

அனைத்து நிலைகளிலும் பின்தங்கியுள்ள அருந்ததியர் சமூகத்திற்கு “முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர்” அனைத்து கட்சிகளின் ஆதரவோடு உள் இட ஒதுக்கீடு வழங்கியதால் இன்று அருந்ததியர் சமூகம் கல்வி பொருளாதாரத்தில் முன்னேறி உள்ளது, ஆனால் அரசியலில் இன்னும் பின்தங்கி உள்ளது, எனவே அருந்ததியர் சமூகம் அடர்த்தியாக வாழ்கின்ற பகுதிகளில் உரிய அரசியல் பங்கீட்டை உறுதி செய்ய வேண்டும் என்று அனைத்து அரசியல் கட்சிகளையும் கேட்டுக் கொள்கிறோம்.

பட்டியல் சமூக மக்களுக்கான இட ஒதுக்கீடு நீண்ட நெடு நாட்களாக உயர்த்தப்படவில்லை, எனவே மத்திய அரசு சாதி வாரி கணக்கெடுப்பை உடனடியாக நடத்தி, பட்டியல் சமூக இட ஒதுக்கீட்டை மத்தியிலும் மாநிலத்திலும் உயர்த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.தமிழ்நாடு அருந்ததியர் கூட்டமைப்பு ஒன்றிய அரசை கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பொங்கல் விழா! குடும்ப அட்டைதாரர்களுக்கு

# பொங்கல் பரிசுத் தொகுப்பு விரைந்து வழங்க நடவடிக்கை!

## இன்று நியாய விலைக் கடைகள் செயல்படும்! உணவுப் பொருள் வழங்கல்துறை அறிவிப்பு!

சென்னை, ஜன.10-

பொங்கல் விழாவை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பு விரைந்து வழங்க ஏதுவாக இன்று (10.01.2025 வெள்ளிக் கிழமை) அனைத்து நியாய விலைக் கடைகளும் செயல்படும் என்று உணவுப் பொருள் வழங்கல்துறை அறிவித்துள்ளது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் சேர்த்து மொத்தம் 2,20,94,585 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையில் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீள கரும்பு ஆகியவற்றை வழங்க ஆணையிட்டுள்ளார். மேலும், பொங்கல் பரிசுடன் விலையில்லா வேட்டி மற்றும் சேலை வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இன்று (09.01.2025 வியாழன்) சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை சின்ன மலையில் இயங்கும் நியாய விலைக் கடையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்கி துவக்கி வைத்ததையடுத்து, அனைத்து நியாய விலைக் கடைகளிலும் பொங்கல் பரிசுத் தொகுப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், பொங்கல் பரிசுத் தொகுப்பு அனைவரும் விரைந்து பெற்றிட ஏதுவாக நாளை (10.01.2025 வெள்ளிக்கிழமை) அனைத்து நியாய விலைக் கடைகளும் வழக்கம்போல் செயல்படும் என அறிவிக்கப்படுகிறது. அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் பொங்கல் பரிசுத் தொகுப்பினைப் பெற்றுப் பயனடையுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு

# வாரிய ஊழியர்கள் முன்னேற்றச் சங்கம் சார்பில் பொங்கல் விழா!

## சமத்துவப் பொங்கல் – கோலப்போட்டிகள் நடைபெறுகின்றன!

சென்னை, ஜன. 10-

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய ஊழியர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் சமத்துவ பொங்கல் விழா மற்றும் கோலப்போட்டி, கேரம் போர்டு போட்டி மற்றும விளையாட்டு போட்டிகள் இன்று (10.01.2025, வெள்ளிக்கிழமை) நேரம்: காலை 09.00 மணியளவில் சங்க அலுவலகத்தில் நடைபெறுகிறது.

வாழ்த்துரை வழங்குபவர்கள் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க. விஜய கார்த்திகேயன், செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர் சு.லால் பகதூர், நிதி ஆலோசகர் சு.ஷண்முகநாதன் மேற்பார்வை பொறியாளர் த.இளம்பரிதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இவ்விழாவில் 9 மணி முதல் 10 மணி வரை கோலப்போட்டி, கேரம் போர்டு போட்டு மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 12 மணிக்கு சமத்துப் பொங்கல், பிற்பகல் 1 மணிக்கு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.



மாதவரம் சட்டமன்ற தொகுதி 16வது வட்டம் ஆண்டார்குப்பம் காமராஜ்புரம் பகுதியில் அமைந்துள்ள நியாய விலை கடையில், பொங்கல் திருநாளை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் பொங்கல் தொகுப்பான புடவை, வேட்டி, அரிசி, சர்க்கரை, கரும்பு ஆகியவற்றை,16வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன் தலைமையில், மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன், மாவட்டத் துணைச் செயலாளர் அறிவழகி பாலகிருஷ்ணன், கவுன்சிலர் ஆ. ராஜேந்திரன், பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன், நா. மோகன் குமார் நாகூரார், பி. தரணி, வட்ட நிர்வாகிகள் வி. மாரி, புவனேஸ்வரி மகேஷ்குமார், ஜி. நாகலிங்கம், எம். சுந்தர், அரியலூர் நாகராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பொதுமக்களுக்கு வழங்கினார்கள். பொருட்களைப் பெற்றுக் கொண்டனர்.

### ஆவடி பருத்திப்பட்டு சூழலியல் பூங்காவில்

# முழு நேர கிளை நூலகத்திற்கான கட்டடம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்தார் !

திருவள்ளூர் ஜன.10-

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி பருத்திப்பட்டு சூழலியல் பூங்காவில் தமிழ்நாடு அரசு போக்கு பொது நூலகத்துறை திருவள்ளூர் மாவட்ட நூலக ஆணை குழு சார்பில் முழு நேர கிளை நூலகத்திற்கான கட்டடம் திறப்பு விழா நடைபெற்றது இதில்

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கட்டிடத்தை திறந்து வைத்தார்

இதனை தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தெரிவிக்கையில்,

வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் இயங்கி வந்த ஆவடி முழுநேர கிளை நூலகம் 30 ஆண்டுகளுக்கு மேலாக 6200 உறுப்பினர்கள், 62 ஆயிரம் புத்தகங்களுடன் செயல்பட்டு வந்தது தினசரி 200க்கும் மேற்பட்ட வாசகர்கள் நூலகத்தை பயன்படுத்தி வந்தனர். கட்டடம் மிகவும் பழுதடைந்து இருந்த காரணத்தால் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதி பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வுக்குப் பின், இந்த நூலக கட்டிடத்தை வேறு கட்டடத்துக்கு உடனடியாக மாற்றும் படி அறிவுறுத்தினார். இதனையடுத்து மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஆவடி பருத்திப்பட்டு பசுமை பூங்காவில் மாநாட்சி மன்ற தீர்மானம் மூலம் நூலகம் செயல்பட கட்டடம் ஒதுக்கப்பட்டது. இக்கட்டடத்தில் இரண்டு தளங்கள் கொண்ட தரைத் தளத்தில் நாளிதழ் மற்றும் பருவ இதழ்கள் பிரிவு , குடிமைப்பணி பயில் மையம் ,நூல் வழங்கும் பிரிவு, இணைய நூலகம் ,கேட்பொலி நூலகம் , முதல் தளத்தில் சிறுவர் நூலகம் , சிறப்பு இதழ்கள் பிரிவு, சொந்த நூல்கள் படிப்பகம் ஆகிய பிரிவுகளைக் கொண்டு இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது இந்நூலகத்தை வாசகர்கள் சிறப்பான முறையில் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்

இந்நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், மாவட்ட வருவாய் ஆ. இராஜ்குமார், மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு கவிதா, துணை மேயர் சூரியா குமார், ஆவடி மாநகராட்சி பொறியாளர் ரவி சந்திரன், மண்டல தலைவர் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி செயலாளர் பொன்.விஜயன், கவுன்சிலர் மீனாட்சி குமார், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் வாசகர்கள், பொதுமக்கள் மற்றும் நூலகப் பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

### ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. – கே.ஏழுமலை எம்.சி. – பி.ஜெயக்குமார் – பி.மாரி பங்கேற்பு!

# தியாகராயர் நகர் 133, 133 (அ) வட்டம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – ஈரோடு இறைவன் – தமிழ்ச்சி தங்கபாண்டியன் எம்.பி. – எஸ்.பத்மபிரியா – கோ.சு.மணி சிறப்புரை!

சென்னை, ஜன. 10-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 133 , 133-அ வட்டத்தில் கழக இளைஞர்அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ‘ஏன் வேண்டும் தி.மு.க. தலைப்பில் விளக்க உரையும், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிம் நாளை 10-1-2025 வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் சர்.பிட்டி.தியாகராயர் கலையரங்கம், தியாகராயர் நகரில் மேற்கு பகுதி கழகச் செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. தலைமையில், கிழக்கு பகுதி செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி முன்னிலையில் நடைபெறுகிறது.


133வது வட்ட கழகச் செயலாளர் பி.ஜெய்குமார், 133அ வட்ட கழகச் செயலாளர் தி.நகர் பி.மாரி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் ச.சண்முகநாதன், மேற்கு பகுதி துணை செயலாளர் பாபாசுரேஷ் ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இக்கூட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கி சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றுகிறார்.

தலைமை கழக பேச்சாளர், மாநில இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இதில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள், தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் - தியாகராயர்நகர் தொகுதி பார்வையாளர் எஸ்.பத்மபிரியா, தலையை செயற்குழ உறுப்பினர் கோ.சு.மணி.

வட்ட கழக செயலாளர்கள் - வடபழனி டி.கமல், தட்சன் ஹரிஹரன், ந.மோ. முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மு.ம.செந்தில்குமார், ஜி.பி. செந்தில்குமரன், ஆர்.சக்திவேல், லலிதாபுரம் என். துரை, வழக்கறிஞர் எஸ். லட்சுமிகாந்தன் மற்றும் 133 வட்ட கழக நிர்வாகிகள், எச்.பலராமன், பழக்கடை இரா.மூர்த்தி, ஈ.ஆறுமுகம், இ.தயாளன், ஆர்.ரமேஷ், ஆர்.கலா, எச்.ஹரி, இளநீர் சுரேஷ், முசாபர் கனி சேட், பீர் முஹமது, வினு ராஜ்குமார், ஓம் பிரகாஷ், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் - திருமதி.பி.தீபா, எஸ்.அசோக் குமார், எம். ஜெகன், தி.நரேஷ், 133-அ வட்ட கழக நிர்வாகிகள் - எஸ்.ஈஸ்வரன், ஆர்.சம்பா, அ.பாலாஜி, திருமதி. மீனாட்சி சுந்தர், ஏ.பி.விஜயராமன், பி.குழிவேல், ஓம் செந்தில், தி.சரவணன், இரா.கார்த்திக், அ.அமர்ச்சந்த், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் - இ.மூர்த்தி, க.மதியழகன், ஆர்.தனசேகர், ஆட்டோ கண்ணன், எம்.மோகனகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.





சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில் பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறியும் நிகழ்ச்சி நடைபெற்றது. சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பின்படி, சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. (வடக்குப் பகுதிச் செயலாளர்) 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே மூர்த்தி எம்.சி., தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி. (பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற துணைத் தலைவர் ஆகியோரின்) முன்னிலையில், 89வது வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் (08.01.2025), (09.01.2025) ஆகிய தினங்களில் காலை, வார்டுக்கு உட்பட்ட பாகங்கள், (254, 255, 257, 294) மற்றும் (295, 296, 296, 297)வது பாகங்களில் உள்ள தெருக்களில் பொதுமக்களை நேரில் சந்தித்து மக்களின் தேவைகளை கண்டறியும் பணியில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பி.எல்.ஏ.–2 பாக நிலை முகவர்கள், பி.எல்.சி. முகவர்கள், மாநகராட்சி மற்றும் அனைத்துத்துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோருடன் நேரில் சென்று கேட்டறிந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க.காசிநாதன் (எ) தமிழரசன்

**சனவரி 9 (2013)**



**சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**